**<u>2023ம் ஆண்டு 31.03.2023ம் தேதி வெள்ளிக் கிழமை அன்று நடைபெற்ற களக்காடு நகராட்சியின் சாதாரணக்கூட்ட தீர்மான எண். 282க்கான உண்மை நகல்.</u>**

**முன்னிலை : திருமதி. கா. சாந்தி, எம்.ஏ., பி.எட்.,**
**நகர்மன்ற தலைவர்,**
**களக்காடு நகராட்சி.**

<u>பொருள் எண். 01</u>

களக்காடு நகராட்சியின் 2022– 23ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீட்டு விபரம் மற்றும் 2023–24ம் ஆண்டிற்கான வருவாய், மூலதன நிதி மற்றும் குடிநீர் வடிகால் நிதி ஆகியவற்றின் உத்தேச வரவு செலவு மதிப்பீட்டு விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**I. வருவாய் வரவினங்கள்**

இந்நகராட்சியின் 2023–2024ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு மதிப்பீட்டின் வரவின தொகுப்பு பின்வருமாறு.

| வ.எண். | இன விபரம் | 2023–2024 |
|---|---|---|
| | வரவு (வருவாய்) | (ரூ. இலட்சத்தில்) |
| 1. | வரிவருவாய் | 70.08 |
| 2. | ஒதுக்கப்பட்ட வருவாய் | 5.75 |
| 3. | நகராட்சி சொத்துக்கள் வாடகை வருவாய் | 19.12 |
| 4. | கட்டணம் மற்றும் பயன்பாட்டு கட்டணம் | 48.65 |
| 5. | விற்பனை வருவாய் | 5.00 |
| 6. | வருவாய் மான்யம் பங்கு | 522.00 |
| 7. | வட்டி ஈட்டப்பட்டது | 12.00 |
| 8. | இதர வருவாய் | 51.00 |
| 9. | மான்யம் மற்றும் பங்கு ஒதுக்கப்பட்டவை | 1.12 |
| | **மொத்தம்** | **734.72** |

| வ.எண். | மூலதன வரவு | 2023–2024 |
|---|---|---|
| 1. | மான்யம் மற்றும் பங்கு தொகை | 839.00 |
| 2. | முன்பணம் வசூலிக்கத்தக்கவை | 2.00 |
| | **மொத்தம்** | **841.00** |
| | **மொத்த வருவாய்** | **1575.72** |

சொத்து வரி, தொழில் வரி ஆகிய இனங்களில் 100 சதவீதம் வசூல் வரவினமாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

உரிமை கட்டணம், குத்தகை வசூல் உரிமம், கட்டண கழிப்பறை வசூல், மர மகசூல், பேரூந்து நிலைய வசூல் உரிமம் மற்றும் நகராட்சி கடைகளின் வருவாய் மற்றும் இதர வரவினங்கள் முழுமையாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

நகராட்சிக்கு வரவேண்டிய முத்திரை கட்டணம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

<u>**செலவினங்கள்**</u>

| **வ.எண்.** | **இன விபரம்** | **உத்தேச மதிப்பீடு 2023–2024 (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1. | பணியாளர்கள் ஊதியம் | 250.31 |
| 2. | நிர்வாக செலவினங்கள் | 28.81 |
| 3. | இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவினம் | 132.00 |
| 4. | வட்டி மற்றும் நிதி செலவுகள் | 12.54 |
| 5. | திட்ட செலவுகள் | 7.75 |
| 6. | இதர பொறுப்புகள் | 60.84 |
| | **மொத்தம்** | **492.25** |

| **வ.எண்.** | **மூலதன செலவு** | **உத்தேச மதிப்பீடு 2023–2024 (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1. | திரும்ப செலுத்த வேண்டிய கடன் | 30.00 |
| 2. | நிலையான சொத்துக்கள் | 893.00 |
| | **மொத்தம்** | **923.00** |
| | **மொத்த செலவினங்கள்** | **1415.25** |
| | **உபரி / பற்றாக்குறை** | **160.47** |

நகராட்சி அலுவலர்களுக்கான ஊதியம், ஓய்வூதிய பயன்கள், அரசு திட்டக் கடன்களுக்கான வட்டி, அசல் மற்றும் நூலக ஆணைக் குழுவிற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை இந்நகர மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் சாலை வசதி, தெருவிளக்கு வசதி, வடிகால் வகதி, குடிநீர் வழங்குதல், போன்றவற்றினை அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

நகராட்சியின் சொந்த நிதி ஆதாரம் மற்றும் மாநில நிதி மான்யம் மூலம் பகிர்ந்தளிக்கப்படும் நிதியினை கொண்டே செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி மாநில நிதிக்குழு மான்ய நிதியானது மொத்த மக்கள் தொகை மற்றும் நகராட்சியின் பரப்பளவு பொறுப்புக்கள் இவைகளை வைத்தே பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

மேலும், வரி மற்றும் வரியில்லா இனங்கள் மூலம் வரும் வரவு மற்றும் மாநில பகிர்வு நிதியின் மூலம் வரும் வருவாயினை முதன்மையாக கொண்டு செலவினங்கள் வரையறுக்கப்பட்டுள்ளது.

மூலதன நிதி கணக்கில் 2023 – 2024ம் ஆண்டிற்கு அரசின் நிதியுதவியுடன் திட்டப்பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உரிய பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | மூலதன நிதி மான்யம் | உத்தேச மதிப்பீடு 2023–2024 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் | 110.00 |
| 2. | நமக்கு நாமே திட்டம் | 22.00 |
| 3. | ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் | 75.00 |
| 4. | சட்டமன்ற / பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் | 35.00 |
| 5. | 15வது நிதிக்குழு மான்யம் | 100.00 |
| 6. | அம்ருத் 2.0 | 1800.00 |
| 7. | திடக்கழிவு மேலாண்மை திட்டம் | 100.00 |
| 8. | தெருவிளக்கு மாற்றம் | 247.00 |
| 9. | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் | 150.00 |
| | **மொத்தம்** | **2639.00** |

எதிர்வரும் நிதி ஆண்டில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், அரசால் அனுமதிக்கப்படும் மானியத்தின் வாயிலாக திட்டப்பணிகள் அனைத்தும் மேற்கொள்ள கருத்துரு மற்றும் திட்ட விபர அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**வரவு செலவு திட்ட கண்ணோட்டம்**

அ) வருவாய் மூலதன நிதி தலைப்பில் வரவு செலவு கீழ்க்கண்டப்படி உள்ளதாக மதிப்பிடப்படுகிறது.

| வ.எண். | விபரம் | திருத்திய மதிப்பீடு 2022–2023 (ரூ. இலட்சத்தில்) | உத்தேச மதிப்பீடு 2023–2024 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | வரவு | 1076.59 | 1575.72 |
| 2. | செலவு | 1061.23 | 1415.25 |
| 3. | உபரி / பற்றாக்குறை | **15.36** | **160.47** |

II. <u>குடிநீர் மற்றும் வடிகால் நிதி வரவினங்கள்</u>

| வ.எண். | இன விபரம் | 2023–2024 |
|---|---|---|
| | வரவு (வருவாய்) | **(ரூ. இலட்சத்தில்)** |
| 1. | வரிவருவாய் | 20.54 |
| 2. | கட்டணம் மற்றும் பயன்பாட்டு கட்டணம் | 97.24 |
| 3. | வசூலிக்கத்தக்கவை | 0.42 |
| | **மொத்தம்** | **118.20** |
| **வ.எண்.** | **மூலதன வரவு** | **2023–2024** |
| 1. | மான்யம் மற்றும் பங்கு தொகை | 1800.00 |
| | **மொத்தம்** | **1800.00** |
| | **மொத்த வருவாய்** | **1918.20** |

<u>செலவினங்கள்</u>

| வ.எண். | இன விபரம் | உத்தேச மதிப்பீடு 2023–2024 |
|---|---|---|
| | | **(ரூ. இலட்சத்தில்)** |
| 1. | பணியாளர்கள் ஊதியம் | 63.29 |
| 2. | இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவினம் | 45.00 |
| | **மொத்தம்** | **108.29** |

| வ.எண். | மூலதன செலவு | உத்தேச மதிப்பீடு 2023–2024 |
|---|---|---|
| | | **(ரூ. இலட்சத்தில்)** |
| 1. | நிலையான சொத்துக்கள் | 1800.00 |
| | **மொத்தம்** | **1800.00** |
| | **மொத்த செலவினங்கள்** | **1908.29** |
| | **உபரி / பற்றாக்குறை** | **9.91** |

2023 – 2024ம் ஆண்டின் உத்தேச மதிப்பீட்டின் விபரம் கீழ்க்காணும் படி மதிப்பிடப்பட்டுள்ளது.

| வ.எண். | விபரம் | திருத்திய மதிப்பீடு 2022–2023 (ரூ. இலட்சத்தில்) | உத்தேச மதிப்பீடு 2023–2024 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | வரவு | 102.34 | 1918.20 |
| 2. | செலவு | 88.81 | 1908.29 |
| 3. | **உபரி / பற்றாக்குறை** | **13.53** | **9.91** |

## 2023 – 2024 ம் ஆண்டு உத்தேச வரவு செலவு அறிக்கை

| | வரவு | செலவு |
|---|---|---|
| வருவாய் நிதி | 1575.72 | 1415.25 |
| குடிநீர் நிதி | 1918.20 | 1908.29 |

**அலுவலகக் குறிப்பு :**

2023–2024ம் ஆண்டிற்கான உத்தேச நிதி நிலை அறிக்கையினை மன்றம் அங்கீகரித்து அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.:**282

பார்வையிடப்பட்டது.

ஒம்/– (கா. சாந்தி)
நகர்மன்ற தலைவர்
களக்காடு நகராட்சி
திருநெல்வேலி மாவட்டம்.

/உண்மை நகல்/

ஆணையாளர் (கூ.பொ)
களக்காடு நகராட்சி
திருநெல்வேலி மாவட்டம்.